21 னவரி 2024
பொதுக்காலம் 3ம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH
newbec

# மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளார்ந்த), பங்கெடுப்பு (படைப்பாற்றல்) மறைத்தூது (இணைப்புப் பாலமாக) பணியில் தூய ஆவியின் துணையுடன் செவிமடுத்து, கொண்டாட்டத்துடன் இணைந்து பயணிப்பது (மாற்கு 15:16)




## இரண்டாம் வத்திக்கான் ங்க திருஅவை கோட்பாட்டு விளக்கம்

**21 நவம்பர் 1964 திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.**

### திருஅவையில் ஒரு ஆயரின் பங்கும் செயல்பாடும் (தொடர்ச்சி)

26. திருப்பணிநிலையின் நிறைவைக் கொண்டிருக்கும் ஆயர் முக்கியமாக நற்கருணையில், "ஒப்புயர்வற்ற திருப்பணி நிலையின் அருளைப் பகிர்ந்தளிப்பவராக இருக்கிறார்"; நற்கருணையை அவரே ஒப்புக்கொடுக்கிறார், அல்லது அதை ஒப்புக்கொடுக்க ஆவன செய்கிறார்; இந்நற்கருணையால்தான் திருஅவை தொடர்ந்து வாழ்கிறது, வளர்கிறது. தங்கள் அருள்பணியாளருடன் இணைந்தவையும் புதிய ஏற்பாட்டில் 'சபைகள்' என அழைக்கப்படுபவையுமான நம்பிக்கை கொண்டோரின் முறையான எல்லா வட்டாரச் சபைகளிலும் கிறிஸ்துவின் இத்திருஅவை உடனிருக்கிறது. ஏனெனில், தங்களது வட்டாரத்தில் தூய ஆவி தரும் வல்லமையோடும் மிகுந்த உள்ளத்துறுதியோடும் (1தெச 1:5) ஆண்டவரால் அழைக்கப்பட்ட புது மக்களே இச்சபைகள். இச்சபைகளில் கிறிஸ்துவின் நற்செய்தியை பறைசாற்றுவதனால் நம்பிக்கை கொண்டோர் ஒன்று சேர்க்கப்பெறுகிறார்கள்; மேலும், "ஆண்டவரின் உடலாலும் இரத்தத்தாலும் சகோதரர் சகோதரிகளாலான குழுவாக எல்லாரும் இணையுமாறு"ஆண்டவரது இரா உணவாகிய மறை நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது. ஆயர் திருப்பணி ஆற்ற, பலிபீடத்தைச் சுற்றிக் குழுமியிருக்கும் எல்லாச் சபைகளிலும் மறையுடலின் அன்பு, ஒற்றுமை எனும் அடையாளம் தெளிவாகப் புலப்படுகிறது. "மறையுடலின் இவ்வொற்றுமை இல்லையென்றால், நிறைவாழ்வு இல்லை" பலமுறைகளில் இச்சபைகள் சிறியனவாகவும் வறியனவாயும் இருந்தபோதிலும் அல்லது சிதறிக் கிடந்தபோதிலும் இவைகளில் கிறிஸ்து உடனிருக்கிறார். இவருடைய ஆற்றலால்தான் ஒரே, தூய பொதுவான, திருத்தூதர் திருஅவை ஒன்றுகூட்டப் பெறுகிறது.90 ஏனெனில், "கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் நாம் பங்கு கொள்வதன் விளைவாக எதை உண்கிறோமோ அதுவாக நாம் மாறுவதன்றி வேறெதுவும் நிகழ்வதில்லை".

முறையான எல்லா நற்கருணைக் கொண்டாட்டங்களையும் ஒழுங்குபடுத்துபவர் ஆயர். மாட்சிமிகு கடவுளுக்குக் கிறிஸ்தவ சமயத்தின் வழிபாட்டைச் செலுத்துவதும் அதை ஆண்டவருடைய கட்டளைகளுக்கும் திருஅவையின் சட்டங்களுக்கும் தமது மறைமாவட்டத்திற்காகத் தாமே தீர்மானழத்துள்ள ஒழுங்குகளுக்கும் ஏற்ப நடத்துவதும் ஆயரின் பணிகளாகும்.

இவ்வாறு ஆயர்கள் மக்களுக்காகக் கடவுளை வேண்டுவதாலும், உழைப்பதாலும், கிறிஸ்துவினது தூய்மை நிலையின் நறைவிலிருந்து ஏராளமான, பல்வகையான கொடைகளை வாரி வழங்குகின்றனர்; வார்த்தையின் பணியால் நம்பிக்கை கொண்டோருக்கு நிறைவாழ்வளிக்கும் கடவுளின் வல்லமையை அளிக்கின்றனர் (உரோ 1:16); அருள் அடையாளங்களின் வழியாக நம்பிக்கை கொண்டோரைத் தூய்மைப் படுத்துகின்றனர். தங்கள் அதிகாரத்தால் இவவருள் அடையாளங்களை ஒழுங்காக, பயன்தரும் முறையில் வழங்க வழி செய்கின்றனர். கிறிஸ்துவின் அரசத் திருப்பணிநிலையில் பங்குதரும் திருமுழுக்கு அளித்தலையும் இவர்களே கண்காணித்து வருகின்றனர்; உறுதிப்பூசுதலை வழக்கமாக அளிப்பவர்களுள், திருப்பணி நிலைகளை வழங்குபவர்களும், ஒப்புரவு முயற்சிகளை ஒழுங்கு படுத்துபவர்களும் இவர்களே. திருவழிபாட்டிலும் முக்கியமாகத் திருப்பலியிலும் தம் பங்கை நம்பிக்கையோடும் வணக்கத்தோடும் தம மக்களை நிறைவேற்றுமாறு ஆர்வத்துடன் அவர்களை ஆயர்கள் ஊக்குவித்துக் கற்பிக்கின்றனர். இறுதியாக, தம்மிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ள மக்கள் குழுவுடன் நிலைவாழ்விற்கு வந்து சேரும்படியாக ஆயர்கள் தம் நடத்தையை எல்லாத் தீமையினின்றும் விலக்கி, இயன்றவரையில் ஆண்டவரது உதவியால் நன்னடத்தையாக மாற்றித் தங்கள் பொறுப்பிலுள்ள மக்களைத் தங்கள் வாழ்க்கையின் முன்மாதிரியால் நடத்திச் செல்ல வேண்டும்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 03/2024

தயாரித்தவர்கள்: செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு Austin Flannery OP, 1975
திருத்தம்: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)
மின்னஞ்சல் directorapikl@gmail.com